ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1824/31 - 2013 අගෝස්තු මස 24 වැනි සෙනසුරාදා - 2013.08.24
*1824/31 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் புத்தளம் பிரதேச சபையின் துணைத் தவிசாளரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

துணைத் தவிசாளர், தவிசாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் காரணமாக புத்தளம் பிரதேச சபையின் துணைத் தவிசாளரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ் பமுனு ஆரச்சிகே நிமல் பமுனு ஆரச்சி எனும் துணைத் தவிசாளர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலக்கெடுவுக்குள் துணைத் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான புத்தளம் பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. போருதொட்டகே சுனில் பர்னாந்து என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது புத்தளம் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் கஹந்தவ ஆரச்சிகே சுமித் சந்தன ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. போருதொட்டகே சுனில் பர்னாந்து என்பவர், புத்தளம் பிரதேச சபையின் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

கே. ஏ. சுமித் சந்தன,
தெரிவத்தாட்சி அலுவலர்,
புத்தளம் பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
புத்தளம்,
*2013, ஓகத்து 15.*

*9 - 149*

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்)**

*10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

**தனமல்விலை பிரதேச சபை**

*தனமல்விலை பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. டபிள்யூ. எம். கருணாதாச கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி பிரதேச சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென தனமல்விலை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சுரங்க அம்பகஹதென்னே ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 10அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*சுரங்க அம்பகஹதென்னே,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*தனமல்விலை பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*மொனராகலை,*
*2013, ஓகத்து 15.*

*9 - 150*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*